# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள்: 06.09.2019 (பிற்பகல்)**

**விசாரணை நடைபெற்ற இடம்,**
**மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஈரோடு.**

**முன்னிலை**

**திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

...............

**வழக்கு எண் SA5798/D/2018**

திரு.எஸ்.ஏ. ஜீலான் .. .. மேல்முறையீட்டார்

/எதிர்/

1). பொதுத் தகவல் அலுவலர்,
சென்னிமலை பேரூராட்சி அலுவலகம்,
சென்னிமலை, ஈரோடு மாவட்டம்.

2) பொதுத்தகவல் அலுவலர்/
தலைமையிடத்து தணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பெருந்துறை, ஈரோடு மாவட்டம். .. .. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

இன்று (06.09.2019) ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற விசாரணைக்கு திரு.எஸ்.ஏ.ஜீலான் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி. ஏ.பாலமுருகாயி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், பெருந்துறை, ஈரோடு

மற்றும் திரு.இரா. கிருஷ்ணன், செயல் அலுவலர், சென்னிமலை பேரூராட்சி, ஈரோடு ஆகியோர் இன்றைய விசாரணைக்கு ஆஜரானார்கள்.

2. மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 19(3)-ன் கீழ் 06.08.2018 அன்று தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (06.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மேல்முறையீட்டாளர் 16.04.2018 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்த மனு மற்றும் 01.06.2018 அன்று சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் தாக்கல் செய்த முதல் மேல்முறையீடு ஆகியவற்றின் அடிப்படையிலானதாகும்.

3. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 16.04.2018 தேதியிட்ட மனுவில், ஈரோடு மாவட்டம், பெருந்துறை தாலுகா, சென்னிமலை பேரூராட்சி சார்ந்த அட்டவணை பிடாரியூர் வருவாய் கிராமம் புல எண்.257, மற்றும் 258 புதிய சர்வே எண்.192/22க்கு உரிய நிலப்பரப்பு எவ்வளவு என்ற தகவல் மற்றும் அந்த கிராம புல எண்.257 மற்றும் 258 சம்பந்தமாக சென்னிமலை பேரூராட்சிக்கு 02.06.1990 தேதியில் மாவட்ட ஆட்சியர் திரு.வி.கே.சுப்புராஜ் இ.ஆ.ப.அவர்களால் வழங்கப்பட்ட ஆணை நகர் மற்றும் ஆணையில் காணும் பார்வை 1,2,3 ஆவண நகல்கள், மற்றும் அந்த கிராம புல எண் தொடர்பான விபரங்களையும் அவை சம்பந்தப்பட்ட தகவல்களையும் 8 இனங்களில் வழங்கக் கேட்டுள்ளார்.

4. மேல்முறையீட்டாளரின் மனு தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 6(3)ன் கீழ் 19.04.2018 தேதியிட்டு உரிய பொதுத் தகவல் அலுவலரான பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், பெருந்துறை, ஈரோடு அவர்களுக்கு மாறுதல் செய்யப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலர் 16.07.2018 தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் சரியான தகவல் வழங்கவில்லை என தெரிவித்து, 01.06.2018 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். முதல் மேல்முறையீட்டு அலுவலர் எந்தத் தகவலும் வழங்கவில்லை என தெரிவித்து, மேல்முறையீட்டாளர் 06.08.2018 தேதியிட்டு பிரிவு 19(3)ன் கீழ் இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்து, தான் கோரிய இனங்களுக்கான சரியான தகவல்களை பெற்றுத்தருமாறு ஆணையத்தை கேட்டுள்ளார். அம்மனு மீது இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

5. விசாரணையின்போது ஆஜரான மேல்முறையீட்டாளர் பொதுத்தகவல் அலுவலர் இனம் 1 மற்றும் 5யை தவிர மற்ற இனங்களுக்கு தனக்கு சரியான பதில் அளிக்கவில்லை என்றும், தான் கோரிய தகவல்களை தனக்கு பெற்றுத்தருமாறு ஆணையத்திடம் கேட்டுக்கொண்டார்.

6. விசாரணையின்போது ஆஜரான பொதுத்தகவல் அலுவலர் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அவர்கள் இனம் 1 மற்றும் 5 இனங்களுக்கான தகவல் மனுதாரருக்கு அளித்துவிட்டதாக தெரிவித்து அதற்குரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார்.

இந்நிலையில், பிறிதொரு பொதுத் தகவல் அலுவலரான செயல் அலுவலர், சென்னிமலை அவர்கள் மனுதாரர் கேட்டுள்ள தகவல்கள் 25 ஆண்டுக்கு முற்பட்ட தகவல்கள் என்றும் அந்த தகவலை தருவதற்கு கால அவகாசம் தருமாறும் ஆணையத்தைக் கேட்டு கொண்டார்.

7. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மேல்முறையீட்டாளருக்கு விரிவான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பது தெரிகிறது. எனவே ஆணையம் கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:-

- இன்றைய விசாரணைக்கு ஆஜரான மேல்முறையீட்டாளர் தகவல் அறியும் உரிமைச்சட்டப் பிரிவு 6(1)ன் 16.04.2018 தேதியிட்ட மனுவில் கோரியிருந்த இனம் 1 முதல் 8-க்கான தகவல்களில், இனம் 1 மற்றும் 5 ஆகிய இனங்களுக்கு பொதுத்தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், பெருந்துறை, ஈரோடு அவர்களால் உரிய தகவல்கள் வழங்கப்பட்டதாக தெரிவித்து ஆணையத்தின் முன்பு அதற்குரிய ஆவணங்களை சமர்ப்பித்தார்.

- **மேல்முறையீட்டாளர் கோரியுள்ள இனம் 2,3,4 மற்றும் 6,7 ஆகிய வினாக்களுக்கு பொதுத்தகவல் அலுவலர்/ செயல் அலுவலர், பேரூராட்சி அலுவலகம், சென்னிமலை அவர்கள் மனுதாரர் கேட்டுள்ள தகவல்களை தங்கள் அலுவலகத்திலிருந்தோ அல்லது சம்பந்தப்பட்ட அலுவலகத்திலிருந்தோ உரிய தகவலை பெற்று, இவ்வாணை கிடைக்கப்பெற்ற *ஒரு மாத* காலத்திற்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)ன் படி கட்டணமின்றி மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி வைத்து, மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

- **இனம் 8ல் (ஈரோடு மாவட்டம் பெருந்துறை தாலுகா, சென்னிமலை பேரூராட்சியை சார்ந்த அட்டவணை பீடாரியூர் வருவாய் கிராமம் புல எண்.257 மற்றும் 258 இடங்கள் தொடர்பாக கோட்ட வளர்ச்சி அலுவலர் ந.க.எண்.5420/96/அ4 நாள் 20.01.97-ல் ஜனாப் எஸ்.அலிகான், த/பெ. சம்சர்கான் அவர்களுக்கு எழுதிய கடித நகல் வழங்குமாறும், கோட்ட வளர்ச்சி அலுவலர் ந.க.எண்.5420/96/அ4, நாள் 20.01.97 கடிதத்தை தொடர்ந்து என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்ற விவரத்தையும் கடிதம் மற்றும் ஆவண நகல்கள் வழங்குமாறும் மேல்முறையீட்டாளர் கோரியிருந்தார்) இந்த இனத்திற்கான தகவலை <u>வருவாய் கோட்டாட்சியர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், ஈரோடு</u> அவர்கள் இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)ன் படி கட்டணமின்றி மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி வைத்து,**

மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

**(ஒம்/-) (ச.த. தமிழ்குமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA5798/D/2018</u>**

**பெறுநர்**
1) பொதுத் தகவல் அலுவலர்/
செயல் அலுவலர், பேரூராட்சி அலுவலகம்,
சென்னிமலை, ஈரோடு மாவட்டம்.

2) பொதுத்தகவல் அலுவலர்/
தலைமையிடத்து தணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பெருந்துறை, ஈரோடு மாவட்டம்.

**நகல்:-**
வருவாய் கோட்டாட்சியர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
ஈரோடு.

**<u>மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்</u>**
திரு. S.A. ஜீலான், த/பெ. S.அலிகான்,
சென்னிமலை கன்னத் ஜமாத் மஸ்ஜித்,
எண்.23/1, காமாட்சி அம்மன் கோயில் வீதி,
சென்னிமலை - 638 051, ஈரோடு மாவட்டம்.

Copy to: File / Stock file
Spare/ SM-PC -19/09/2019